# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

"பூம்பொழில்", 5, டாக்டர் டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை – 600 028

தொலைபேசி: 2464 1212.'.2464 1919 தொலைநகலி: 2461 7996





திருமதி. ஆர். விஜயலஷ்மி

பதிவாளர்(பொ)


எண்/045/பதிவாளர்/B1/2020

தேதி: 01.07.2020

## சுற்றறிக்கை

பொருள்: நிர்வாகப்பணியாளர்கள் - நிரந்தர பணியாளர்கள/ஒப்பந்த அடிப்படை மற்றும் தினக்கூலி பணியாளர்கள் - பல்வேறு காரணங்களால் பணிக்கு வராதது – முன் அனுமதி பெறுவது குறித்து - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண்.239- நாள் 15.05.2020 தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையிடமிருந்து பெறப்பட்டது.

2. இவ்வலுவலக சுற்றறிக்கை கடித எண்.045 நாள்.16.05.2020

3. அரசாணை எண்.299 நாள் 16.06.2020, தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையிடமிருந்து பெறப்பட்டது.

4. இவ்வலுவலக சுற்றறிக்கை கடித எண்.045 நாள்.18.06.2020

5. அரசாணை எண்.324 நாள் 30.06.2020, தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையிடமிருந்து பெறப்பட்டது.

****

பார்வை (1)-ல் காணும் அரசு ஆணையின்படி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்திர/ஒப்பந்தமுறை மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாட்களை 33 சதவிகித அடிப்படையில் 19.06.2020 முதல் 30.06.2020 வரை இயங்க அந்தந்த துறைத்தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பார்வை (5)-ல் காணும் அரசாணைப்படி 01.07.2020 முதல் 05.07.2020 வரை தற்பொழுது நடைமுறையில் உள்ள ஊரடங்கு விதிகளை நீட்டித்தும் மேலும், 06.07.2020 முதல் 31.07.2020 வரை பார்வை (1)-ல் காணும் அரசாணை பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (50 சதவிகித பணியாட்களை கொண்டு குழுமம் - I மற்றும் குழுமம் - II).

மேற்காணும் சூழ்நிலையில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் நிரந்திர/ஒப்பந்தமுறை மற்றும் தினக்கூலி பணியாளர்கள் பலர் தடைசெய்யப்பட்ட பகுதி என்பதாலும் மற்றும் சிலர் சொந்த ஊருக்கு சென்று விட்ட காரணத்தினாலும் மற்றும் சிலர் பொதுப்போக்குவரத்து இல்லாத காரணத்தினாலும் மற்றும் சிலர் காரணம் ஏதும் தெரிவிக்காமலும் பணிக்கு வருவதில்லை என்று அறியப்படுகிறது.

ஆகையால், நிரந்திர/ஒப்பந்தமுறை மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள், பணிக்கு வராமை குறித்த காரணத்தை உரிய ஆவணங்களுடன் தவறாது அந்தந்த துறைத்தலைவருக்கு தெரிவித்து முன்அனுமதி பெறுமாறும், மேலும் அவ்விவரத்தினை துறைத்தலைவர்கள் பதிவாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்க இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

//ஆணைப்படி//

ஆர்.விஜயலஷ்மி 1/7/2020

பதிவாளர் (பொ)

பெறுநர்:

1. அனைத்து தனியர்களுக்கும் (அந்தந்த துறைத் தலைவர்கள் மூலமாக)

நகல்:

2. துணைவேந்தரின் பார்வைக்காக தனிச்செயலருக்கு அனுப்பப்படுகிறது
3. நிதி அலுவலர் 4. தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் 5.இயக்குநர், இளங்கலை சட்டப் படிப்பு, சீர்மிகு சட்டப்பள்ளி

6.நூலகர். 7. சார்ஜெண்ட்/துணை பாதுகாப்பு அதிகாரி

8. கோப்பு நகல்

Scanned with CamScanner